2. தகவல் கோரல்.

அ) பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது குறித்து.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மனிதாபிமான பிரச்சினை ஒன்று. கண் பார்வையற்றோர் கோட்டை நோக்கி ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது குறை, அவர்கள் பயிற்சி பெற்றாலும் வேலை வாய்ப்பு பெறமுடியவில்லை என்பதாகும். மத்திய அரசாங்கத்தின் கொள்கை கண்பார்வை இழந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பது; ஊமையர்களாக உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்பது. அதற்காக இவர்களுக்கு, ஒரு, ஒரு சதம் ஒதுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நமது அரசாங்கத்திற்கு இது ஏற்கெனவே தெரியும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராது. சொல்ல வேண்டியதைச் சொல்லி, ரெக்கார்டில் ஏற்றி விட்டீர்கள். மற்றதை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

ஆ) தொகுதிகளில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள அந்தந்த தொகுதி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பது.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது, அவையிலே பணியாற்றுகின்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கின்ற வகையிலே இருக்கிற பிரச்சினை ஆகும். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தொகுதிகளிலே நடக்கின்ற அரசு விழாக்களிலே அமைச்சர்கள் பங்கேற்கின்ற பொழுது, அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்திக் கேட்டு, நம்முடைய அவை முன்னவராலே அப்படி செய்யப்படும் என்கின்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் என்னுடைய சைதாப் பேட்டை தொகுதியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பால்வள அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். * * அவர்கள் கூட கலந்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * என்று தமிழ்நாட்டிலும் இல்லை, உலகத்திலும் இல்லை. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கும்படி உத்தர விடுகிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : இன்றைய தினம் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும் மற்றும் மூன்று மந்திரிகளும் என்னுடைய தொகுதியில் ஒரு விழாவிலே கலந்து கொள்ள இருக்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.